# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318733

1. District : திருச்சி மாவட்டம் PS: உ.போ.க.மாரி காவல்நிலையம் Year: 2025 FIR No.: 12 ஆண்டு மு.த.அ. எண் Date: 07.10.25 நாள்

2. (i) Act சட்டம்: உணவுப் பாதுகாப்புத் தரம் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (திருத்தம் 2018) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.10.25 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 18.30 Hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 07.10.25 Time : 07.00 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : (கணினியில் பட்டச செய்யப்படு)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 2km வடமேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Mannarpuram EB office அருகில்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. ராஜீ (b) Father's/ Husband's Name : அலங்கார உடையார்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 02.12.63 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Retired AGM (g) Address : எண். 7, பீஸ் கார்டன், மேம்பாலபாணையம்,
தொழில் TNPL, Pugalur முகவரி புகழ் புகளூர், கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. அருண், மேல்நிலை பொறியாளர், பரமசிவம். தாலுகா,
திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
உடனியான் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்
இணைக்கப்பட்டுள்ளது

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக வழங்கப்பட்டது.

07/10/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

7.10.25

15 Date & Time of despatch to the court: 07.10.25
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. BALAMURUGAN
Rank: நிலை Inspector of Police, VSAC, Trichy.

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 07.10.2025 காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது கரூர், புஞ்சை புகளூர், செம்படாபாளையம், செங்குறிச்சி, பீஸ் கார்டன், 47, என்ற முகவரியில் வசித்து வரும் அலங்கார உடையார் மகன் A.ராஜு என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகா, மேக்குடி கிராம சர்வேயர் திரு.அருண் மற்றும் புகார்தாரர் திரு.ராஜு ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி ரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 07.10.2025 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2025 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் A.ராஜு, த/பெ.அலங்கார உடையார், 47, பீஸ் கார்டன், செம்படாபாளையம், புஞ்சை புகளூர், கரூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. பொருள்: என்னிடம் லஞ்சம் கேட்ட ஸ்ரீரங்கம் தாலுகா மேக்குடி கிராம சர்வேயர் அருண் மீது நடவடிக்கை எடுக்க கோரி. ஐயா, நான் கரூர் மாவட்டம், புஞ்சை புகளூர், செம்படாபாளையம் பீஸ் கார்டனில் வசித்து வருகிறேன். நான் TNPL காகித ஆலையில் Assistant General Manager ஆக பணிபுரிந்து டிசம்பர் 2023ல் ஓய்வு பெற்று விட்டேன். ஸ்ரீரங்கம் தாலுகா, மேக்குடி கிராமத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகரில் உள்ள சர்வே எண்.65/1 & 65/2 கட்டுப்பட்ட பிளாட் எண்.551 மற்றும் 552 இரண்டு பிளாட்டுகளை எனது மனைவி மேரி பிரபாவும் மற்றும் சர்வே எண்.65/2 கட்டுப்பட்ட பிளாட் எண.550ஐ எனது மகன் ஜெரி கிஷோரும் 25.09.2025 தேதி வாங்கி கே.சாத்தனூர் ரிஜிஸ்டர் ஆபிஸில் பத்திர எண்.5846 மற்றும் 5847 ஆக பதிவு செய்தோம். பத்திர பதிவு செய்யும் போதே தனி பட்டா வேண்டி பணம் கட்டி விட்டோம். 01.10.2025 தேதி எங்களிடம் நிலத்தை விற்ற நரேஷ் என்பவர் பிளாட்களுக்கு தனி பட்டா வாங்குரது விசயமா சர்வேயர் அருணிடம் என்னை பேச சொன்னதால், நான் சர்வேயர் அருணிடம் பேசினேன். அப்போது சர்வேயர் அருண் என்னிடம் நான் தான் மேக்குடி கிராமத்திற்கு சர்வேயர், நீங்க வாங்குன மூணு பிளாட்டுகள் Sub division பண்ணி தனி பட்டா கேட்டது SR Officeல இருந்து என்னுடைய Loginக்கு வந்துச்சு, நான் போய் அந்த இடத்தையும் பாத்துட்டேன். கொஞ்சம் formalities இருக்குது, நீங்க என்ன வந்து பாருங்க

என்று சொன்னார். சரிங்க சார் நான் திருச்சிக்கு 03.10.2025 தேதி வர வேண்டிய வேலை இருக்கு அப்ப வந்து உங்கள பார்க்கிறேன் என்று சொன்னேன். பின்னர் நான் 03.10.2025 தேதி திருச்சி வந்து சர்வேயர் அருணுக்கு போன் பண்ணியபோது அவர் என்னிடம் சாயங்காலம் 5½ மணிக்கு crawfordக்கு ஒரு வேலையா வருவேன் அப்ப உங்கள கூப்பிடுரேன் என்று சொன்னார். அவரு கூப்பிடாததால் ரெண்டு மூணு தடவை அவருக்கு போன் செய்தேன். வெயிட் பண்ணுங்க நான் கூப்பிடுறேன்னு சொன்னார். பின்னர், 6½ மணிக்கு எனக்கு சர்வேயர் அருண் போன் பண்ணி, மன்னார்புரம் EB Office பக்கத்துல பைக்கோட தனியா நிக்கிறேன் நீங்க வாங்க என்று சொன்னார். நான் உடனே மன்னார்புரம் EB Officeக்கு பக்கமா போய் பைக்கோட தனியா நிக்கிறவர பார்த்து நீங்க தான் அருண் சர்வேயரா என்று கேட்டேன், ஆமாம் நான் தான் என்று கூறிவிட்டு உங்க மனைவி பேர்ல தனி பட்டா கேட்டத முடிச்சு தாசில்தாருக்கு forward பண்ணிட்டேன். formalities முடிச்சுட்டீங்கன்னா உங்க மகன் பேர்ல இருக்கிறத அடுத்ததையும் முடிச்சு பட்டா கொடுக்க சொல்லிருவேன். ஒரு பிளாட்டுக்கு 8000 ரூபாய் வீதம் மூணு பிளாட்டுக்கும் சேர்த்து மொத்தமா 24000 ரூபாய் எனக்கு தனியா கொடுத்துடுங்க என்று சொன்னார். நானே ரிட்டையர்டாயிட்டேன், Register பண்ணும்போதே பணம் எல்லாம் கட்டிட்டேனே சார், என் கிட்ட அவ்வளவு பணம் இல்லை சார்ன்னு சொன்னேன். சரி ரிட்டையர்டா, என்னங்க இப்படி சொல்றீங்க, சரி ஒரு பிளாட்டுக்கு 3000 ரூபாய்னு போட்டு 9000 ரூபாயாவது கொடுங்க. நான் சொன்னத நீங்க கொடுத்து formalities முடிச்சுட்டீங்கன்னா உங்க வேலைய முடிச்சு கொடுத்துடுறேன். இல்லைனா பெண்டிங்ல போட்டிருவேன் பார்த்துக்கோங்க. பணத்தை ரெடி பண்ணிட்டு செவ்வாய் கிழமைக்குள்ள என்னை கூப்பிடுங்க என்று சொன்னார். வேறு வழியில்லாமல் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. என் மனைவியிடமும் சொன்னேன். அவரும் லஞ்சம் கொடுக்க வேண்டாம். அவர் மீது லஞ்ச ஒழிப்பு துறையில புகார் கொடுத்து நடவடிக்கை எடுங்க என்று சொன்னார். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட ஸ்ரீரங்கம் தாலுகா மேக்குடி கிராம சர்வேயர் அருண் மீது நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, Sd.xxx 07/10/2025. Sir, Submitted to the Hon'ble Principal District Judge, Tiruchirappalli. Received the report at 07.00 Hrs., on 07.10.25 and made a Confidential enquiry and registered a case in Trichy V&AC Cr.No.13/2025 u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 08.00 Hrs., on 07.10.25. Sd.xxx (K.BALAMURUGAN) 07/10/25 Inspr of Police, V&AC, Trichy.

7/10/25

K. BALAMURUGAN

Inspr. V&AC, Trichy